<u>**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**</u>

| **MCOP.No. 83/2018** | **Date : 31.07.2026** | **PW 1** |
|---|---|---|
| Name: கனகா | க/பெ. ராமலிங்கம் | |

**மனுவின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இறந்து போன எனது கணவர் ராமலிங்கம் என்பவரது இறப்புச்சான்றிதழ் நகல் தாக்கல் செய்கிறேன் அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இறப்பு சான்றிதழில் எனது கணவரின் வயது 70 என உள்ளது என்றும் நான் மனுவில் 65 என்று குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4ம் மனுதாரர் ராமகிருஷ்ணன் என்பவர் திருமணமாகி தச்சு வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். அதேபோல் 2ம் மனுதாரர் கல்பனா, 3ம் மனுதாரர் காஞ்சனா ஆகீய இருவரும் திருமணமாகி அவரவர் கணவருடன் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது வயதான கணவரும் நானும் 2 முதல் 4 வரையுள்ள மனுதாரர்களின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தோம் என்றும் 2 முதல் 4 மனுதாரர்கள் என் கணவரின் வருமானத்தை சார்ந்து வாழ்ந்தார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

ஒம்/—கனகா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.